முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நம்மாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.01.2019, சனிக்கிழமை

1. **கலிவாழ் மக்களின் காப்பாளனே**
**கண்கண்ட தெய்வமே அரங்கனே**
**அழியாமை ஞானம் தந்து காக்க**
**ஆறுமுகனாக வந்த அரங்கனே**
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி கலை திங்கள்**
**வரங்களென பஞ்சதிகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 5ம் நாள் 19.01.2019, சனிக்கிழமை)**
**வழங்கிடுவேன் நம்மாழ்வார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் கொள்கையை
ஞானமாக ஏற்று வரும் மக்களெல்லாம்
ஞானியாவர் என்று உரைப்பேன்
4. உரைக்கவே பிரணவக் குடிலின்
உயர் தொண்டர் பெருமக்களே
கறைபடா திட சிந்தையுடன்
கலிகால ஞானியை குருவாய் ஏற்று
5. ஏற்றுமே அரங்கன் தருமத்தை
எக்காலமும் தடைபடா தொடர்ந்திட
ஆற்றல்பட அறம் வளர்த்துமே
அரங்கா என பொருளுதவி செய்து
6. செய்துமே உலக சேவையில்
சிறப்பான தொண்டர்களாகி
மெய்ஞான சக்தி கூடிட
முழுமதி கால பூசை கலந்து
7. கலந்துமே அரங்க மகானிடம்
கணக்காய் உயர் தீட்சை ஏற்று
பலம் பெற சரணடைவு கொண்டு
பாடிட தொடர் சேவை ஆற்றிட
8. ஆற்றிட அடியவர்களாக வரும்
அனைவருக்கும் சித்தி ஏற்பட்டு
மாற்றமும் பிறவா பெரும் பேறும்
மரணமில்லா பெருவாழ்வும் கிட்டும்
9. கிட்டவே உலக மாற்றத்துக்கு
குறையிலா தவபலத்தோடு வந்த
கட்டம் போக்கும் அரங்கனே
கலியுகத்தின் மாதவசியே உலகின்

10. உலகின் சிறந்த ஞானியாகும்
உண்மைபட ஏற்கும் தேசமே
வளமுடன் சகல பலமும்
வல்லமையும் பாதுகாப்பும் பெறும்

11. பெருமைபட அரங்கனை நாடிட
பேருலகே அமைதி காப்பும்
வறுமை வன்மை இல்லாத
வளமும் நலமும் பாதுகாப்பு காணும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகத்தினில் வாழ்ந்து துன்பப்படுகின்ற மக்களைக் காக்கும் கலியுக காப்பாளனே கண்கண்ட தெய்வமே அரங்கமகா தேசிகனே அற்புதமான அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வினை மனிதகுலத்திற்கு அருளி ஞானம் தந்து காத்திடவே முருகப்பெருமானாக வந்துதித்த அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 5ம் நாள் 19.01.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நம்மாழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நம்மாழ்வார்.

உயர்வான ஞானமளிக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகளை ஞானத்தின் வழிமுறைகளாக ஏற்று வாழ்வினில் பின்பற்றி வருகின்ற மக்களெல்லாம் ஞானிகளாக ஆகிடுவார்கள் என்றே உரைக்கின்றேன் நம்மாழ்வார் யானுமே.

ஓங்காரக்குடிலின் உயர்வான தொண்டர் பெருமக்களே, கறைபடாத திடமான சிந்தனையுடன் கலிகால மகா ஞானி அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஞானகுருவாக மனம் விரும்பி சந்தேகம் இன்றி ஏற்றுக் கொண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனார் ஆற்றும் தானதருமப் பணிகளை அவரவரும் கடமையாக ஏற்று அரங்கனின் தானதருமப் பணிகள் தடைபடாமல் தொடர்ந்து நடந்திட தேவையான பொருளுதவிகளை “அரங்கார்ப்பணம்” “முருகார்ப்பணம்” எனக் கூறியே அர்ப்பணித்து செய்து உலக சேவையில் சிறப்பான தொண்டர்களாக ஆகி, மெய்ஞான சக்தியும் பெருகிடும் வகையில் அவரவரும் அரங்கன் நடத்துகின்ற பௌர்ணமி சிறப்பு சித்தர் ஞானபூஜைகளிலே கலந்து கொண்டு ஆறுமுக அரங்கரிடத்து அன்றைய தினம் தீட்சை உபதேசம் அடைந்து, மேன்மேலும் ஆன்மபலம் பெறும் வகையில் அரங்கனின் திருவடிகளிலே முழுச்சரணாகதியினை அடைந்து தொடர்ந்து இடைவிடாது தொண்டுகளை செய்து வர வேண்டும்.

இவ்விதமே அரங்கன் திருவடிகளே கதியென தம்மை முழுமையாக அர்ப்பணித்து அரங்கன் திருவடிகளிலே முழுச்சரணாகதியினை அடைந்து அரங்கன் திருவடி நிழலிலே தொடர்ந்து தொண்டுகளை மனம் உருகி பரோபகார சிந்தையுடன் செய்து வருகின்ற அடியவர்களுக்கு அவர் தம்முள்ளே முருகப்பெருமானின் அருளினால் குரு அரங்கனின் கருணையால் சித்திகள் ஏற்பட்டு அற்புதமான மாற்றங்களெல்லாம் அவர்தம்முள்ளே உண்டாகி மரணமில்லாப் பெருவாழ்வும் கிடைத்திடுமப்பா. துன்பம்மிக்க இந்த கலியுகத்தினை தமது தவ பலத்தினால் குறையில்லா ஞானயுகமாக மாற்றி மக்களைக் காக்க வந்துதித்த அவதார மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே இந்த கலியுகத்தின் மகா ஞான தவசியே இந்த உலகின் ஒப்பற்ற மிகச்சிறந்த ஞானியாவார்.

அப்படிப்பட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை குருவாய், தெய்வமாய் உண்மையுடன் ஏற்கும் நாடே சகல வளமுடன் சர்வபலமும் பெற்று சர்வ வல்லமையுடன் சர்வ பாதுகாப்பையும் ஞானிகளின் அருள் பாதுகாப்பையும் பெற்றிடும்.

பெருமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து அரங்கனை நாடிட இந்த பேருலகமே அமைதியும் பாதுகாப்பும் பெற்று வறுமையற்ற கொடுமையற்ற உலகமாக எல்லா நலமும் வளமும்மிக்க அருள்பாதுகாப்புடைய ஞானஉலகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நம்மாழ்வார்.

–சுபம்–